## சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# விஞ்ஞானம்

தரம் 10

வாரம் 38

**அலகு : சடப்பொருள்களில் ஏற்படும் மாற்றம்**

**இவ்வரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றுற்பேறுகள் :**

- உலோகங்கள் வளி, நீர், ஐதான அமிலங்களுடன் காட்டும் தாக்கங்களை எளிய செயற்பாடுகள் மூலம் காட்டுவார்.
- உலோகங்கள் வளி, நீர், ஐதான அமிலங்களுடன் நடைபெறும் தாக்கங்களை ஒப்பிடுவார்.
- தாக்குதிறனை அடிப்படையாகக் கொண்டு தொழிற்பாட்டுத் தொடர் அமைக்கப்படடது எனக் கூறுவார்.
- தரப்பட்ட உலோகங்களிற்கு தொழிற்பாட்டுத் தொடரைக் கட்டியெழுப்புவார்.
- இடப்பெயர்ச்சித் தாக்கத்தின் அடிப்படையில் உலோகங்களின் அமைவிடத்தைத் தொழிற்பாட்டுத்தொடரில் தீர்மானிப்பார்.
- தொழிற்பாட்டுத்தொடரின் பயன்களைக் கூறுவார்.
- தொழிற்பாட்டுத்தொடரில் உள்ள உலோகங்களின் அமைவிடத்துக்கு ஏதுவாக பிரித்தெடுப்பு முறைகளை விவரிப்பார்.
- தாழ்த்தல் முறையின் மூலம் இரும்பு பிரித்தெடுக்கப்படும் முறையினை விளக்குவார்.
- ஏமற்றைற்றிலிருந்து இரும்பு பிரித்தெடுக்கும்போது நடைபெறும் தாக்கங்களை எழுதுவார்.
- தொழிற்பாட்டுத்தொடரில் பொன் அமைந்துள்ள இடத்துக்கு அமைவாக அதன் பிரித்தெடுப்பு முறையை விவரிப்பார்.
- தொழிற்பாட்டுத்தொடரில் உலோகம் அமைந்துள்ள இடத்துக்கு அமையப் பொருத்தமான பிரித்தெடுப்பு முறையை முன்மொழிவார்.

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- விஞ்ஞானம் பகுதி II பாடப்பத்தகத்தின் பக்கம் 113 – 120 வரை நன்கு வாசித்து பின்வரும் விடயங்கள் பற்றி தகவல்களைத் திரட்டி குறிப்பெடுத்துக் கொள்க.
    - வெவ்வேறு உலோகங்கள் ஒட்சிசனுடன் காட்டும் தாக்கங்கள்
    - வெவ்வேறு உலோகங்கள் நீருடன் காட்டும் தாக்கங்கள்
    - வெவ்வேறு உலோகங்கள் ஐதான அமிலங்களுடன் காட்டும் தாக்கங்கள்
    - உலோகங்கள் பிற உப்புக் கரைசல்களுடன் காட்டும் தாக்கங்கள்
- பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    - தாக்கவீதத் தொடர் என்றால் என்ன?
    - தாக்வீதத் தொடரை எழுதுக.
    - தாக்கவீதத் தொடரின் பயன்களை எழுதுக.
- பாடநூலின் பக்கம் 120 – 122 வரை நன்கு வாசித்து விளக்கம் பெறுக.
- அப்பகுதியிலிருந்து வினாக்கள் தயாரித்து அவற்றிற்கான விடைகளையும் எழுதிக் கொள்க.

- பாடப்புத்தகத்தின் 123 இல் உள்ள ஒப்படை 16.2 இனைச் செய்க.
- பாடப்புத்தகத்திப க்கம் 123 இல் உள்ள பொன் பிரித்தெடுப்பு தொடர்பான பகுதியை நன்கு வாசிக்க.
- மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 135 இலுள்ள பயிற்சி வினாக்களுக்கும் மற்றும் 136 இலுள்ள வினாக்கள் 6, 7 இற்கும் விடை எழுதுக.
- இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :** https://youtu.be/DCGv-yLuB98

**Youtube :**

சோடியத்தின் தாக்கங்கள் - https://www.youtube.com/watch?v=vUpsw9cPGRI

தாக்கவீதத்தொடர் - https://www.youtube.com/watch?v=wGxnRs-P78k

இரும்பு பிரித்தெடுப்பு - https://www.youtube.com/watch?v=FIfvZHd4u5g

**கணிப்பீடு :**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

I. இரும்புத்தாதில் காணப்படும் இரும்பு அடங்கிய பிரதான கூறு யாது? அதன் இரசாயன சூத்திரம் என்ன?
II. இரும்புத் தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுக்கப்பயன்படும் கட்டமைப்பின் பெயர் என்ன?
III. இரும்புப் பிரித்தெடுப்பின்போது நடைபெறும் இரசாயனத் தாக்கங்களை எழுதுக.
IV. இரும்புபப் பிரித்தெடுப்பின்போது உலோகக் கழிவுகள் தோன்றுவதற்கான இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.
V. பொன் பிரித்தெடுக்கப்படும் முறையை எழுதுக.